Te Tari Matawaka
Office of Ethnic Communities

**தற்காலிக விசா வைத்திருப்பவர்களுக்கான COVID-19 அவசரகால நன்மை நீட்டிக்கப்பட்டுள்ளது**

- தற்காலிக விசா வைத்திருப்பவர்களுக்கான COVID-19 அவசரகால நன்மை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- இந்த குறுகிய கால ஆதரவு பிப்ரவரி 28 அன்று முடிவடைகிறது, எனினும் இந்த ஆண்டு ஆகஸ்ட் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- COVID-19 இன்னும் குறிப்பிட்ட சில நாடுகளுக்கிடையேயான பயணத்தை கட்டுப்படுத்துவதால், அவசரகால நன்மையை நீட்டிப்பது என்பது ஆதரவு தேவைப்படும் தற்காலிக விசா வைத்திருப்பவர்கள் COVID-19 -இன் காரணமாக வீடு திரும்ப இயலாதவர்களுக்கு சமூக மேம்பாடு அமைச்சகம் தொடர்ந்து உதவ முடியும்.
- அவசரகால நன்மையானது மக்கள் தங்களுக்கு தாமே ஆதரவளித்து கொள்ள இயலாதவர்கள் மற்றும் கோவிட் COVID-19 -இன் காரணமாக வீடு திரும்ப இயலாதவர்களுக்கும் அடிப்படை வாழ்க்கை செலவுகளை எதிர்கொள்ள உதவுகிறது.
- **COVID-19 எச்சரிக்கை நிலை 1 இன் கீழ்:** மக்கள் தங்கள் அவசரகால நன்மைகள் செலுத்துதல்களை பிப்ரவரி 28 க்கு அப்பால் நீட்டிக்க அல்லது முதல் முறையாக விண்ணப்பிக்க ஒரு ஒர்க் அண்ட் இன்கம் சர்வீசஸ் மையத்தை அணுக வேண்டும். நீங்கள் உங்கள் மிக அருகிலுள்ள சேவை மையத்தைக் கண்டுபிடிக்க பின்வரும் இணைப்பைக் கிளிக் செய்க: https://www.workandincome.govt.nz/about-work-and-income/contact-us/find-a-service-centre.
- **COVID-19 எச்சரிக்கை நிலை 2, 3 அல்லது 4 இன் கீழ்:** மக்கள் தங்களது தற்போதைய அவசர நன்மைத் தொகையை மறுமதிப்பீடு செய்து பிப்ரவரி 28 க்கு பின்னும் நீட்டிக்க அல்லது முதல் முறையாக விண்ணப்பிக்க 0800 559 009 என்ற தொலைபேசி எண்ணை அழைக்கலாம்.
- அவசர நன்மைக்கு தகுதி பெற்றவர்கள் குடும்ப வரிக் கடன் மற்றும் சிறந்த தொடக்க வரிக் கடன் மற்றும் 1 மே 2021 முதல் குளிர்கால எரிசக்தி கொடுப்பனவு ஆகியவற்றைப் பெறலாம்.
- அவசரகால நன்மை பெறும் தற்காலிக விசா வைத்திருப்பவர்கள் வேலை அல்லது தன்னைத் தானே ஆதரிப்பதற்கான மாற்று வழிகளைத் பார்க்க வேண்டும். இயன்றபோது வீடு திரும்புவது உட்பட.
- சமூக மேம்பாட்டு அமைச்சகம் (MSD) மக்களை பொருத்தமான சாத்தியமான இடங்களில் தற்காலிக வேலை வாய்ப்புகளுடன் தொடர்ந்து இணைக்கும்.
- விண்ணப்பத்திற்கான படிநிலைகள்:
    - ஒர்க் அண்ட் இன்கம் சர்வீசஸ் மையத்தில் உள்ள பணியாளர்கள் உட்பட நீங்கள் யாரையாவது விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்ய உதவி கேட்கலாம். உங்களுக்கு விண்ணப்பப்படிவத்தை பூர்த்திச் செய்ய உதவும் இந்த நபர் விண்ணப்பப் படிவத்தில்

உதவியாளரின் வாக்குமூலத்தை பூர்த்தி செய்கிறார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

- சமூக மேம்பாட்டு அமைச்சகத்துடன் கையாளும் போது உங்கள் சார்பாக வேறொருவர் செயல்படவும் நீங்கள் தேர்வு செய்யலாம். இந்த நபர் ஒரு முகவர் என்று அழைக்கப்படுகிறார். உங்கள் சார்பாக வேறொருவர் செயல்படுவது குறித்த கூடுதல் தகவல்கள் இங்கே கிடைக்கின்றன: https://www.workandincome.govt.nz/on-a-benefit/your-rights-and-responsibilities/having-someone-act-on-your-behalf.html
- உங்கள் சொந்த மொழியிலேய யாருடனும் பேசுவதற்க்கு கோரலாம். எச்சரிக்கை நிலைகள் அனுமதித்தால் மொழிபெயர்ப்பாளர்களை நேரிலோ அல்லது தொலைபேசியிலோ சந்திக்க ஏற்பாடு செய்யப்படலாம். மொழிபெயர்ப்பாளர்கள் பற்றிய கூடுதல் தகவல்கள் இங்கே கிடைக்கின்றன: https://www.workandincome.govt.nz/about-work-and-income/contact-us/language-lines/index.html

- COVID-19 தற்காலிக விசா வைத்திருப்பவர்களுக்கான COVID-19 அவசரகால நன்மை பற்றிய கூடுதல் விவரங்கள் ஒர்க் அண்ட் இன்கம் சர்வீசஸ் இணையதளதில் கிடைக்கப்பெறுகின்றன: https://www.workandincome.govt.nz/covid-19/temporary-visa-holders.html.

இந்த தகவல் மொழிபெயர்ப்பு உள் விவகார துறையின் கீழ்வரும் மொழிபெயர்ப்பு பிரிவினரால் மொழிபெயர்க்கப்பட்டு பன்மொழி தகவல் பிணையத்தால் பகிரப்படுகிறது. நெட்வொர்க்கைப் பற்றிய கூடுதல் தகவலுக்கு பார்வையிடவும் இன சமுதாயங்கள் ஆணையம் இணையதளம்.